வகித்தார். பள்ளி தலைமையாசிரியர் லதா முன்னிலை வகித்தார். பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் மகாலிங்கம் வரவேற்றார்.

# பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பிரசாரம்




**அரியலூரில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மரக்கன்று நட்டு வைக்கப்படுகிறது.**

**அரியலூர், பிப்.25:** தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், தேசிய பசுமைப்படை, அரியலூர் நகராட்சி சார்பில் அரியலூர் நகரில் பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு, பிளாஸ்டிக் ஒழிப்பு- தூய்மை பணி விழிப்புணர்வு நடந்தது. மான்போர்ட் பள்ளி குழந்தைகள், நிர்மலா பள்ளி மாணவிகள், லிங்கத்தடிமேடு பள்ளி குழந்தைகள் பங்கேற்றனர். நிர்மலா பள்ளி வளாகத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நலினா, இளமதி, மாவட்ட வனத்துறை அலுவலர் இளங்கோவன், அரியலூர் நகராட்சி ஆணையர் திருநாவுகரசு மற்றும் கல்வித்துறை ஆய்வாளர் பழனிச்சாமி உள்ளிடோர் 100க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டனர். இதையடுத்து நிர்மலா பள்ளியில் இருந்து ரயில் நிலையம் வரை உள்ள சாலையில் உள்ள பிளாஸ்டிக் மற்றும் குப்பைகளை மாணவர்கள் சுத்தப்படுத்தினர். மேலும் பொதுமக்களிடம் பிளாஸ்டிக் பயன்படுத்தக்கூடாது, குப்பைகளை ஆங்காங்கே கொட்டக்கூடாது, மரம் நடுவதால் நமக்கு மழை மற்றும் தூய்மையான காற்று கிடைக்கிறது என்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.